மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்துூர்
முன்னிலை– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்துூர்.
2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 11 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.05/2024
இன்
அசல் வழக்கு எண்.18/2019
-----

1. நடராஜ் ரெட்டியார் (இறப்பு)
2. பெருமாள்சாமி ரெட்டியார்
3. ஜவஹர்
4. ஜெயசீனிவாசன்
5. இராஜேஸ்வரி
6. ஜெயபாஸ்கரன்
7. இராஜலட்சுமி
8. கிருஷ்ணவேணி ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. தர்மலிங்கம்
2. சத்தியபாமா .. எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவனாது இறுதியாக என் முன்பாக 20.06.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அருணாச்சலம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. நாகராஜன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது வா.சா.1 குறுக்கு விசாரணையை Recall செய்ய அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 18 விதி 17 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>4 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்–</u>**

**2.1.** மனுவில் 4 ம் மனுதாரர். அசல் வழக்கில் 4 ம் பிரதிவாதி. மனுதாரர் இந்நிர் மனுவை மற்ற மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர்/வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக 28.02.2024 அன்று வாய்தா ஏற்பட்டிருந்தது. வாய்தா ஏற்பட்ட அன்று மனுதாரர்கள் குடும்ப பிரச்சனை காரணமாக சென்னை சென்றுவிட்டதால் மனுதாரர்களால் நீதிமன்றத்திற்கு வர முடியவில்லை. மனுதாரர்களுடைய வழக்கறிஞரும் விருதுநகர் நீதிமன்றத்திற்கு சென்றுவர காலதாமதமான காரணத்தினால் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யாமல் முடிக்கப்பட்டது. வா.சா.1–யை விசாரணை செய்யாமல் மற்ற வாதி தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டு வா.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யாமல் வா.சா.2 குறுக்கு விசாரணை செய்ய முடியாது. எனவே மனு தாக்கல்.

3. **<u>எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபணையின் சுருக்கம் –</u>**

**3.1.** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை அவர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மனுவில் 3 வது பாராவில் மனுதாரர்கள் குடும்ப பிரச்சனை காரணமாக சென்னை சென்றுவிட்டதாக கூறியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக சொல்லப்பட்டது. எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளின் முதல் விசாரணை முடிந்த பிறகு தற்போது வா.சா.1 குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்திருப்பதால் வழக்கை காலம் கடத்த

வேண்டும் மற்றும் வீணான அலைச்சல் மற்றும் பொருட் செலவு ஏற்பட வேண்டுமென்ற தீய நோக்கத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

5. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் 4ம் மனுதாரர். அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி. மனுதாரர் தரப்பில் வா.சா.1–யை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால் வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக 28.02.2024ம் தேதி வாய்தா ஏற்பட்ட அன்று மனுதாரர்கள் குடும்ப பிரச்சனை காரணமாக சென்னை சென்றுவிட்டதாகவும், அன்றைய தினம் அவர்களுடைய வழக்கறிஞர் விருதுநகர் நீதிமன்றத்திற்கு சென்றுவர காலதாமதம் ஆகிவிட்ட காரணத்தினால் வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. எனவே வா.சா.1–யை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது எனக் கூறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய ஆட்சேபணையில், மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் வழக்கை காலம் கடத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரர்கள்/ வாதிகளுக்கு வீணான அலைச்சல் மற்றும் பொருட்செலவு ஏற்பட வேண்டுமென்ற தீய நோக்கத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–யை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்வதற்காக 28.02.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மனுதாரர்கள் குடும்ப பிரச்சனை காரணமாக சென்னை சென்றுவிட்டதாலும், மேலும் மனுதாரர்களுடைய வழக்கறிஞர் விருதுநகர் நீதிமன்றத்திற்கு சென்றுவர காலதாமதம் ஆகிவிட்ட காரணத்தினால் வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணையில் வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற தீய நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படப் போவதில்லை. எனவே மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கு மனுதாரர்கள் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

## 7. இறுதி முடிவு

இறுதியாக மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை ரூ.300/–ஐ 21.07.2025 ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 21.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம்

செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
சாத்துார்
**இ.ம.எண்.05/2024**
**இன்**
**அ.வ.எண்.18/2019**
உத்தரவு
நாள் **-11.07.2025.**